# தமிழ்நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

தி. பி. 2019 ஆடவை (30-6-1988) ஓர் உருபா (இதழ் எண்: 106)


# பொழிலன் பிடிபட்டார்! பொழிலுடன் அவர் நண்பர் முகிலனும் பிடிபட்டார்!

## காவல்துறை தமிழ்நாடு முழுவதும் ஏறத்தாழ முந்நூறு உ.த.மு.க. அன்பர்களிடம் உசாவல் நடத்தியுள்ளது!

## உ.த.மு.க. இயக்கத்தில் தொடர்பு இல்லாதவர்களிடமும் உசாவல் நடந்துள்ளது!

## நூற்றுக் கணக்கான அன்பர்களை நீண்ட நாள்கள் காவல்துறை அதிகாரிகள், தங்கள் சார்பில் அடைத்து வைத்துக் கொண்டு உசாவல் நடத்தும் கொடுமை!

உ. த. மு. க. தலைமையகத்தின் வழக்குமன்ற நடவடிக்கைகள்!

ஏபியசு கார்பசு, பொறுப்பெடுப்பு முறையீடுகள் உயர்நெறி மன்றத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன! உ.த.மு.க. தலைமையக அறிக்கை!

**உலகத் தமிழின முன்னேற்றக் கழகம்,** உலகெங்கும் வாழ் தமிழினத்தவர்களின் முன்னேற்றம் கருதி, ஆறு ஆண்டுகளுக்கு முன், 1982-இல், சென்னையில், ஒரு பெரிய தொடக்கநிலை மாநாட்டை இரண்டு நாள்கள் நடத்தித் தொடங்கப் பெற்ற, உலகம் தழுவிய ஓர் இயக்கமாகும்.

அதன் மாவட்டக் கிளைகள் தமிழ் நாடெங்கும் பரவலாகத் தொடங்கப் பெற்றன. உலகத் தமிழின

Scanned with CamScanner

# கல்விச் சிந்தனைகள்!

பறம்பை அறிவன்.

## 1. கல்வியும் ஒழுக்கமும்!

"தஞ்சாவூர் மாவட்டம் குடந்தை அரசினர் பெண்கள் கல்லூரி மாணவிகள் சுற்றுலாச் சென்ற போது மாணவிகள் கற்பழிக்கப்பட்டனர்; அம்மண மாக்கப்பட்டனர்; ஒளிப்படம் எடுக்கப்பட்டனர். இதற்குப் பேராசிரியைகளும் உடந்தை" என — தராசு 22-4-88 — இதழில் வந்துள்ள கட்டுரையைப் படித்தால் 'கல்வியும் ஒழுக்கமும்' எதிர்மறைகளாகிப் போனது தெரியும். சட்டமும் ஒழுங்கும், காவலும் கட்டுப்பாடும் எதிரெதிராகிப் போனமை விளங்கும்.

இத்தகைய செய்திகள் புதியன அல்ல. ஆனால், கல்வியின் வளர்ச்சி தளர்ச்சிகளை ஆராய்ந்து வரும் நாம்; அதன் வெளிப்பாடாகவுள்ள இந்தக் குமுகக் கொடுநெறிகளை நாம் சும்மா பார்த்துக் கொண்டிருப்பது சரியாகாது!

இத்தகைய நிலைமைகளை எதிர்த்துப் போராடும் அமைப்புகள் இவற்றுற்கான அடிப்படைகளை ஆராய்ந்து வெளியிட்டு மக்களை விழிப்புறச் செய்தல் வேண்டும்.

## 2. போராட்ட இயக்கங்கள்!

போட்டியிட்டுக் கொண்டு போராட்ட அறிவிப்புச் செய்யும் இயக்கங்கள். அரசுச் சார்பு, அரசு எதிர்ப்பு நிலைகள் எடுத்துப் பிரிந்துள்ளன. கல்வி கற்கும் மாணவர், கற்பிக்கும் ஆசிரியர், மக்கள் என்ற சார்பின்றிச் செயல் படுவதால் ஆசிரியர் அமைப்புகள் பெரும்பயன் விளைக்கப் போவதில்லை.

'கூட்டு நடவடிக்கைக் குழு'வின் நோக்கம் 'உரிமைகளை'ப் பெறுவதில் ஒன்றிணைந்திருக்கிறது என்கின்றனர். இதற்கான திட்டவரைவு இல்லை. எனவே, ஆயிரம் கொடுத்தால் எந்த அமைப்பும் இணையலாம் என்ற கொள்கையற்ற நிலைமை, கூட்டு நடவடிக்கைக் குழுவில் குடியேறியுள்ளது!

பேராயக்கட்சியும், பொதுவுடைமைக் கட்சியும், திராவிட இயக்கங்களும், பிற மாநில, இந்தியக் கட்சிகளும் ஆசிரியர் மாணவர் அமைப்புகளைப் பங்கு போட்டுக் கொள்ள முயல்கின்றன. என்றாலும் அவை ஆசிரியர்கள் மாணவர்களிடம் தங்கள் அரசியலை வெளிப்படையாக ஏற்கும் உரிமைக்கும் போராடுவதில்லை. காரணம், மக்கள் அரசியல் சாய்காலைப் பறிகொடுக்க அவை விரும்பவில்லை. அல்லது, அதற்கான வலிமைகளைப் பெறவில்லை என்றுதான் கூறுதல் வேண்டும்!

## 3. தேர்தலைக் குறிக்கோளாக் கொண்டவர்க்கு எதிர்காலக் கண்ணோட்டம் எப்படி அமையும்?

"கல்வித்துறையிலும் அரசு ஆட்சித்துறையிலும் வேரூன்றி நிற்கும் கையூட்டு, ஊழலை அகற்ற நடவடிக்கை தேவை" என்று இந்தியப் பொதுவுடைமைக் கட்சி (C.P.I.)யின் செயலாளர் ப. மாணிக்கம் தமிழக நிலைமைபற்றிக் கூறும் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

'முற்போக்கான ஆட்சி அமைக்கப் போராடுவோம்'
— ப. மாணிக்கம். (குமுதம் 21-4-88).

கல்வி, ஆட்சி இரண்டும் இப்படி ஊழல் வேரோடியிருக்கக் காரணம் என்ன? கல்வி முறை மாற்றம் ஆட்சி முறை மாற்றம் பற்றிச் சிந்தித்தாலே இவற்றிற்கான தீர்வுகள் தெளிவாகும்.

ஆனால், ப. மாணிக்கம் இக்கட்டுரையின் தொடக்கத்தில்.

"பத்தாண்டுகளாக எம். ஜி. ஆர். ஆட்சி செய்தார். அவரது கட்சி பெரும்பான்மை பெற்றிருந்தது. அந்த ஆட்சியில் ஏழைமக்கள் அடைந்த நன்மைகள் சாரவுணவுத் திட்டம், இலவய வேட்டி, சேலை, முதியவர்கள் ஓய்வுப்பணம் ஆகியவை ஆகும்" என்று கூறியுள்ளார்.

இவை நன்மைகளா? எளிய மக்களை ஏமாற்றுந் திட்டங்களா? தோழர். ப. மாணிக்கம் முடிவாகக் கூறல் வேண்டும்.

இத்திட்டங்கள் ஊழலை வளர்த்தன. இதனால் ஏற்பட்ட இழிவும், இளைய தலைமுறைக் கேற்பட்ட அவலமும் குறித்து நாம் சிந்தித்தல் வேண்டும்.

கல்வி குறித்த கவலையோ, எதிர்காலக் கண்ணோட்டமோ, 'தேர்தல் வெற்றியைக் குறிக்கோளாகக் கொண்டவர்க்கு' இருப்பதில்லை. அப்படியிருந்தாலும் அவை, மாற்றுக் குறைந்தனவாகவே இருக்கும்!

## 4. 42 ஆண்டுக் காலமாகியும் அயலகக் கண்டுபிடிப்புகள் தாமா?

நம் அறிவின் எல்லை என்று ஒன்றில்லை. ஆயின், முயற்சி, வினை இவற்றிற்கு ஓர் எல்லை உண்டு. 'அரங்கம் ஆடி, அம்பலம் ஏறு' என்ற கருத்து வினை முயற்சிக்குப் பொருந்தி வரும்.

காரைக்குடியில் நடந்த, 'நடுவண் மின் வேதியல் தொழில் முனைவோர் பயிற்சி அரங்கில்' அதன் ஆராய்ச்சி நிலைய இயக்குநர் திரு. கே. வாசு பேசும் போது, "இந்திய அரசின் தவறான பொருளி

(தொடர்ச்சி 9-ஆம் பக்கம்)

Scanned with CamScanner

(முதல் பக்கத் தொடர்ச்சி)

முன்னேற்றக் கழகத்திற்குப் பதிவு செய்யப்பெற்ற உறுப்பினர்களோ, உறுப்பாண்மைக் கட்டணமோ இல்லை. இஃது ஒரு செயலியக்கம்; உணர்வியக்கம். தூய தமிழ் உணர்வும், தமிழின நல முன்னேற்றமும், சாதியற்ற, மத வேறுபாடற்ற சம நிலைக் குமுகாய உணர்வும் இழிவும் பூசலும் ஏமாற்றும் இல்லாத அரசியல் உணர்வும், தமிழ்த் தேசிய இனத்திற்குப் பொருந்திய பொருளியல் கோட்பாடும், மனம், அறிவு, வாழ்க்கை — இவற்றை வளப்படுத்தவும் நலப்படுத்தவுமான அருவருப்பற்ற கலையீடுபாடும், பழந்தமிழ் மரபுக்கும், மாந்தவியல் சிறப்புக்கும் ஒத்த பண்பாட்டுப பரிமாற்றமும், எல்லாவற்றிலும் காலத்திற்கேற்ற அறிவியல் உணர்வும் கொண்ட எவரும் உ.த.மு.க. ஆதரவாளராகவே கருதப்படுவர்.

இதற்குத் தலைவர் இல்லை. செயல் முதல்வராக இதன் தோற்றுநரும், மேற்கண்ட கொள்கைகளுக்காகவே கடந்த நாற்பதாண்டுகளாக உழைத்து வருபவருமான **பாவலரேறு பெருஞ்சித்திரனார்** அவர்கள் இயங்குகிறார்.

இந்த இயக்கம் தமிழகத்தில் மட்டுமின்றி வேறு சில மாநிலங்களில் உள்ள தமிழர்களிடத்தும், சில ஐரோப்பிய, அமெரிக்க, கிழக்காசிய நாடுகளிலும் ஆங்காங்குற்ற அரசியல், நாட்டு நிலைகளுக்கேற்ப, சிற்சில மாறுதல்களுடன் இயங்கி வருகிறது.

இதன் செயல் முதல்வராகிய **பாவலரேறு பெருஞ்சித்திரனார்** வெளிநாடுகளில் உள்ள அன்பர்களை இவ்வியக்கத்தில் இணைத்து இயங்கச் செய்வதன் பொருட்டு, இரு முறை சிங்கை, மலேசிய நாடுகளுக்கும், ஒரு முறை ஐரோப்பிய, இலங்கை நாடுகளுக்கும் சுற்றுச் செலவு மேற்கொண்டு நூற்றுக் கணக்கான சொற் பொழிவுகளை ஆற்றி அன்பர்களைத் தமிழின முன்னேற்றத்திற்கென ஆற்றுப் படுத்தியிருக்கின்றார். ஆற்றுப் படுத்தி வருகிறார்.

அத்துடன், தாம் ஆசிரியராக இருந்து இயக்கக் கருத்துகளைப் பரப்புவதற்காகவே **தமிழ்நிலம்** என்னும் கிழமை இதழைக் கடந்த ஐந்தாண்டுகளாகவும், அவ்வியக்கக் கொள்கைகளுடன் தனித்தமிழ்நாட்டுக் கொள்கையை வலியுறுத்தித் **தென்மொழி** என்னும் மாத இதழைக் கடந்த இருபத்தொன்பதாண்டுகளாகவும், இவ்வுணர்வுகளின் தொடக்க — அடிப்படை உணர்வுகளை இளம்பருவப் பள்ளிக் குழந்தைகளுக்கும் மாணவர்களுக்கும் உணர்த்தும் நோக்கத்துடன் **தமிழ்ச்சிட்டு** என்னும் இதழைக் கடந்த இருபத்து ஐந்து ஆண்டுகளாகவும் — பல்வேறு இடர்ப்பாடுகளுக்கும் இடையூறுகள், துன்பங்கள், பொருள் நலிவுகள், சிறைப் பிடிப்புகள் ஆகியவற்றுக் கிடையிலும் — தொடர்ந்து நடத்தி வருவதும் அனைவரும் அறிந்தனவே.

இந்த இயக்கம் சிறிதுசிறிதாக வளர்ச்சியுற்று வருவதும், வலிமை பெற்று வருவதும், பரவி வருவதும், வடநாட்டுத் தில்லியரசுக்கும், தமிழகத்தில் உள்ள அதன் அடிவருடிகளுக்கும், காட்டிக் கொடுப்பான்களுக்கும், ஆரியப் பார்ப்பனர்களுக்கும், சில பொழுதுகளில் நம் திரவிடத் தமிழ் இன நல இயக்கங்களுக்கும் அவற்றின் தலைவர்களுக்கும் கூட — பெரிய கண்ணுறுத்தலாகவும், மண்டையிடியாகவும் இருந்திருக்கிறது என்பதை, நம் இயக்கத்தில் ஊன்றிய ஈடுபாடு உள்ளவர்களும், எதிரணியில் இருப்பவர்களும் நன்கு அறிவர்.

இந்த நிலையில்தான், நம் இயக்கவுணர்வு வளர்ந்து முருகிய கொள்கைப் பிடிப்புள்ள இளைஞர்கள் சிலர், நம் இயக்கத்தின் மெதுவான, ஆனால் படிப்படியான, மென்மைப் போக்கையும், அதன் உள்ளுரக் கருத்து வளர்ச்சித் தன்மைகளையும் மனவியல் அடிப்படையிலும் குமுகாய அடிப்படையிலும் நன்கு விளங்கிக் கொள்ளாத, பொறுமையும் பொறுட்பும் கருதாத நிலையில் சில வன்மையான உணர்வுகளை வளர்த்தெடுத்துக் கொண்டு, நாம் விரும்பாத, ஆதரிக்காத, துணையில்லாத, சில நடைமுறைகளில் ஈடுபட்டுள்ளார்கள் என்பது தெரிய வருகின்றது.

அதன் விளைவாகவோ, வேறு வகை வளர்ச்சி இணைப்புத் தொடர்பாகவோ, நம் இயக்கத்தின் ஒட்டு மொத்தப் போக்கிற்கும் இயல்பான செயற்பாடுகளுக்கும் ஒரு பெரிய புறத்தாக்கமும், உட்புற அதிர்ச்சியும் ஏற்பட்டுள்ளன.

கடந்த சில மாதங்களுக்கு முன் சென்னை கத்திபாராவில் நிறுத்தப்பெற்ற நேரு சிலைக்கு வைக்கப் பெற்ற குண்டு அதிர்ச்சியும், கொடைக்கானல் தொலைக்காட்சி நிலையத்திற்கு நேர்ந்த குண்டுவைப்பு முயற்சியும் — உ. த. மு. க. தொடர்பான இளைஞர் சிலரின் தொடர்பு கொண்டு நிகழ்த்தப் பெற்றன என்னும் கருத்து அடிப்படையில், உ. த. மு. க. இயக்க அன்பர்கள் சிலர் தளைப்படுத்தப் பெற்றனர்.

நம் இயக்க துணைப் பொதுச் செயலர் திரு. **வடிவேல் இராவணன்**, திருச்சி மாவட்டப் பொருளர் திரு. **ஈகவரசன்** இருவரும் இக்கால், நிலக்கோட்டையிலும், மதுரையிலும் சிறைவைக்கப் பெற்றுள்ளனர். அவர்கள் கடந்த இரண்டு மாதங்களாக வெஞ்சிறையில் வாடுவதுடன், தங்களின் வாழ்வியல் நலன்கள் அனைத்தையும் இழக்குமாறு, பல குற்றச் சாட்டுகளுக்கும் ஆளாக்கப் பட்டுள்ளனர். அவர்களிடம் காவல்துறை கடுமையான முறையில் நடந்து, பல வேறான வாயுரை அறிக்கைகளை வெளியிட்டுள்ளது.

Scanned with CamScanner

அவர்கள் இருவரையும் பொறுப்பில் வெளிக் கொண்டு வர, உ. த. மு. க. தலைமையகம், உயர் நெறி மன்றம் வரையிலான அனைத்து வகைச் சட்ட முயற்சிகளையும் எடுத்துள்ளது.

இனி, கடுமையான உசாவல்களுக்கென, காவல் துறை, சென்னையில் திருவாளர்கள் தென்மொழி **நா. இளமாறன்**, **குணத்தொகையன்**, **ஆகுன்றன்**, **ச. மா. விசுவாசவரம்**, தெய்வமணி, அவர் உடன்பிறந்த தம்பியர் இருவர், புதுவையில் **சுகுமாறன்**, வடவார்க் காட்டில் **மா. செ. தமிழ்மணி** முதலியோர் தளைப்படுத்தப் பெற்று, மாநிலக் காவல்துறை அதிகாரியின் அலுவலகத்திலேயே நீண்ட நாள்களாக வைக்கப் பெற்றுள்ளனர். இவர் களுள் சிலர் இயக்க ஈடுபாடே இல்லாதவர்கள்.

இவர்கள் அனைவரையும் காவலர் பிடிப்பினின்று மீட்டு, வெளிக் கொணரத் தலைமையகம், உயர்நெறி மன்றத்தில் ஆள் கொணரும் (ஏபியசு கார்பசு) சட்டப்படி நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்கிடையில் தலைமறைவாக இருந்ததாக, திருவாளர்கள் **பொழிலன்**, **முகிலன்** இருவரையும் நாகர்கோவில் பகுதியில், காவலர்கள், தளைப்படுத்தி மதுரைச் சிறையில், கடுமையான உசாவலுக்கென, வைத்துள்ளதாகத் தெரிகிறது.

இவர்களையும் காவலர் பிடிப்பினின்று மீட்க உயர்நெறி மன்றத்தில் சட்ட நடவடிக்கை எடுக்கப் பெற்றுள்ளது.

இந் நடவடிக்கைகளே அன்றி, நெல்லை, மதுரை, திருச்சி, தஞ்சை, கோவை, தென்னார்க் காடு, வடவார்க்காடு, சேலம், புதுவை முதலிய மாவட்டங்களிலிருந்தும், நகரங்களிலிருந்தும், ஏறத்தாழ, முந்நூற்றுக்கும் அதிகமான அன்பர்களை அவர்கள் **தென்மொழி**, **தமிழ்நிலம்** வாங்கிப் படிப்பவர்கள், ஒருவகையில் ஆசிரியருடன் தொடர் புள்ளவர்கள் என்பதற்காகவே, ஆங்காங்குள்ள மாவட்டக் காவல்துறை அதிகாரிகளின் அலுவலகங்களில் பல நாள்கள் தொடர்ச்சியாகவும், விட்டு விட்டும், திடுமெனச் சென்று பிடித்து வந்தும், அச்சுறுத்தியும், அவமதிப்பாகவும் தன் உசாவல்களைக் காவல் துறை நடத்தியுள்ளது.

சில ஊர்களில் உள்ள அன்பர்களின் வீடுகளிலிருந்து **தென்மொழி**, **தமிழ்நிலம்** இதழ்கள் பறிமுதல் செய்யப் பட்டிருக்கின்றன.

இவையன்றித் **தென்மொழி**, **தமிழ்நிலம்** விற்பனையாளர்களில் பலபேர் காவல்துறையினரால் அழைத்து மிரட்டப் பட்டும், அவ்விதழ்களை இனி விற்க மாட்டோமென அறிக்கை அனுப்புமாறும் அச்சுறுத்தப் பட்டுள்ளனர்.

நம், சொல்லாய்வறிஞர் **அருளி** அவர்களின் தஞ்சைப் பல்கலைக் கழகத்திற்குச் சொந்தமான ஆய்வு அலுவலகத்திற்குத் திடுமெனச் சென்று அவர் ஆராய்ச்சித் தாள்களையும் நூல்களையும் தாறுமாறுகப் புரட்டியும், கலைத்தும் ஆய்வு நடத்தியதுடன் அவரையும் இரண்டு மூன்று முறைகள் தொடர்ந்த ஆய்வுக்கு உட்படுத்தியுள்ளனர்.

இனி, இவையும் போதாமல், **பாவலரேறு** அவர்களிடம் அவர்களின் பெண்டு பிள்ளைகளிடமும், தனித்தனியாக உள்ள அவர்களின் குடும்பத்தினரிடமும், சேலத்தில் உள்ள அகவையான அவர் அன்னையாரிடமும், அவர் உறவினர்களிடமும் காவல்துறை அடிக்கடியும், அடுத்தடுத்தும், கடுமையாகவும் உசாவல் நடத்தியுள்ளது.

இவ்வளவு நடவடிக்கைகளுக்கும் மாநிலக் காவலதுறை மேல்மட்ட அதிகாரிகளின் தம் சொந்த விருப்பும் வெறுப்புமே கரணியம் என்றும் தெரிய வருவதுடன், தில்லியிலுள்ள அரசு அதிகாரிகள் எவ்வாறேனும், இவ்வியக்கத்தையும், இதன் **தனித்தமிழ் நாட்டு, ஆரிய எதிர்ப்பு, தமிழ் வளர்ச்சிக் கொள்கைகளையும்** பூண்டோடும், தரையோடு தரையாகவும் புய்த்துத் தேய்த்து அழித்து விடும்படி குறிப்புக் காட்டி ஏவி விட்டிருப்பதும் அதற்கடிப்படையானது என்றும் நமக்குச் செய்தி கிடைத்திருக்கிறது.

ஏதோ, பொருளற்ற, அல்லது மிகுதியும் கேடற்ற, எதிர்ப்புணர்வு ஒன்றே குறிக்கோளாகக் கொண்ட ஓரிரு சிறு செயல்களை அடிப்படையாக்க் கொண்டு, இந்த இயக்கத்தின் ஏறத்தாழ முப்பது முப்பத்தைந்தாண்டுக் கால விளைவுகளையும், தமிழகத்தில் வேறு எங்கும் எவரிடத்தும் எந்தக் கட்சியின் கொள்கையாகவும் இல்லாமல், இவ்வியக்கத்திற்கே தனிச்சிறப்பாயும், வேறு எவரும் எக்காலத்தும் செய்ய முடியாத, மொழி, இன, நாட்டு நல, உரிமை முயற்சிகளைச் செய்யும் இதனை அறியாமையும், அதிகாரவெறியும், வட நாட்டுத் தில்லி ஆண்டைகளிடம் வாங்கித் தின்னும் வாய்ப்பை இழந்துவிடக் கூடாதே என்னும் தந்நலவுணர்வும் கொண்ட காவல் அதிகாரிகள், ஏவலாலோ, எரிச்சலாலோ, அழித்தும் ஒழித்தும் விட முடியும் என்று எண்ணி இவ்வாறு, நம்மிடமும் நம் இயக்கத்தவரிடமும், ஒன்றுமறியா நம் வாசக, விற்பனை அன்பர்களிடமும் நடந்து கொள்வது, கடந்த மூவாயிரமாண்டுக்கால உரிமைமீட்பு முயற்சியின் விளைமரத்தையே வேரறுப்பதாகும். இதை வருங்காலமும் வரலாறும் மன்னிக்கவே மன்னிக்காது என்பதை மட்டும் தமிழ்நாட்டுத் தமிழினக் காவலர்க்கும், மற்ற காட்டிக் கொடுக்கும் வஞ்சகர்களுக்கும் பிற கோழையர்க்கும் இப்பொழுதைக்குச் சொல்லி வைக்கின்றோம்.

புரட்சி என்பது நெருப்புப் பொறி. அ'து ஓரின மக்களுக்கு இன்னோரின மக்கள் ஏற்படுத்தும், உறுத்தலாலும் உரைசலாலும் ஏற்படுவது! அது அணைக்க அணைக்க மீண்டும் மீண்டும் பற்றி இறுதியில் பெருநெருப்பாக மாறியே தீரும்! 0

Scanned with CamScanner

# 'நம் வருவாய் என்ன? செலவென்ன? மீதம் என்ன?

(ஒரு சுருக்கமான பொருளியல் பார்வை.)
(இதிலுள்ள புள்ளி விளக்கங்கள் அனைத்தும் இந்திய அரசின் 1988-89-ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தை அடிப்படையாகக் கொண்டவை.)

| அரசுகளின் செலவு | உருபா |
|---|---|
| நடுவண் அரசின் ஆண்டுச் செலவு: | 73,560 கோடி |
| மாநில அரசுகள் அனைத்துக்கும் ஆன ஓர் ஆண்டுச் செலவு. | 50,000 கோடி |
| இந்தியாவின் மக்கள் தொகை; | 78 கோடி |

**அரசின் வருவாய்.**

| | |
|---|---|
| நடுவண் அரசும், மாநில அரசுகளும் சேர்ந்து மக்களிடம் ஓர் ஆண்டுக்குத் தண்டும் வரிகள். | 56,566 ,, |
| இந்தியாவில் உள்ள ஒவ்வொருவரும் ஓர் ஆண்டுக்குச் செலுத்தும் வரி: | 725 உருபா |
| ,, ஒரு நாளைக்கு: | 1.99 உருபா |

(வருமானம் இல்லாதவர்கள், குழந்தைகள், வேலை செய்யாத பெண்கள் எல்லாரும் தலைக்கு நாள் தோறும் உரு 2/- வரி செலுத்துகிறார்கள்

**செலவிடும் காசை உண்ணக் கொடுத்தால்:**

o நடுவண், மாநில அரசுகள் ஆண்டுக்கு மொத்தம் உரு 1,09,388 கோடி செலவு செய்கின்றன. இது 87-88-ஆம் ஆண்டுக் கணக்குப்படி. இது தலைக்கு ஆண்டுக்கு உரு 1400/- ஆகின்றது. நாளுக்கு உரு 4. இந்தப் பணத்தை நேரடியாக உணவாக அளித்தால் கூட இந்நாட்டில் ஒருவரும் உணவின்றி உறங்க வேண்டியிராது.

**காவலோ காவல்!**

o நடுவண் அரசின் கருவி தாங்கிய காவல் படைக்காக மட்டும் நடப்பாண்டில் உரு 1,120 கோடி செலவாகும். இது நாளொன்றுக்கு உரு 3.07 கோடியாகும். இதனுடன் மாநில அரசுகள் காவல் படைக்காகச் செலவிடும் ஏறத்தாழ உரு 2,500 கோடியையும் சேர்த்துக் கொள்ள வேண்டும். இப்படிப் பார்த்தால் நடுவண், மாநில அரசுகள் காவல் படைக்காக நாள்தோறும் உரு 10. கோடி செலவிடுகின்றன.

இந்தக் காவல் படை பற்றாது போகும் பொழுது படைத்துறையையும், நடுவண் காவல் படையையும் அழைப்பார்கள். அவற்றிற்காக ஆண்டுக்கு உரு 13,000 கோடி செலவு ஆகிறது. இது உரு 35.62 கோடி ஒரு நாள் செலவுடைய படை.

எனவே 50% மக்கள் வேலையின்றியும் அரை குறை வறுமையிலும் வாழும் நாட்டுப் பாதுகாப்புக்காக நாள்தோறும் உரு 45-62 கோடி செலவிடப் படுகிறது.

**சுண்டைக்காய் கால் பணம்!**
**சுமைக் கூலி முக்கால் பணம்!**

தொழிலாளர் நலன்களுக்காகவும், வேலை வாய்ப்புகளுக்காகவும் உரு 242 கோடி ஒதுக்கப் படுகிறது. குமுகாய நலம், சேம நலம் ஆகியவற்றுக்காக உரு 225 கோடி ஒதுக்கப் பட்டிருக்கிறது.

ஆனால் ஐயப்பாடுகளுக்குரிய இவ் விளைவுகளை விளம்பரப் படுத்துவதற்காக வானொலிக்கு மட்டும் உரு 334 கோடி ஒதுக்கப் படுகிறது.

**பாராளுமன்றச் செலவுகள்:**

இந்திய அரசின் பாராளுமன்றச் செலவுகள் ஆண்டுக்கு உரு 20.60 கோடியாகிறது. அஃதாவது நாளொன்றுக்கு 5,64,383 உருபா ஆகிறது.

**குடியரசுத் தலைவர், துணைக்குடியரசுத் தலைவர்:**

குடியரசுத் தலைவர்க்கும், துணைக் குடியரசுத் தலைவர்கரும் நாள் ஒன்றுக்கு உரு. 65,205 செல விடுகிறார்கள்.

**அமைச்சர்களுக்கு:** அமைச்சர்களுக்காக ஆண்டுக்கு. உரு 15.30 கோடி செலவாகிறது. ஒரு நாள் செலவு 4,46,575.

**தணிக்கைச் செலவு:**

இந்தச் செலவுகளையெல்லாம் கண்காணிக்கும் கணக்குத் தணிக்கைக்கு ஆண்டொன்றுக்கு 182 கோடி உருபா செலவாகிறது; நாள் ஒன்றுக்கு உரு. 50 இலக்கம் செலவு.

ஆனால், இந்தத் தணிக்கைச் செலவு என்பது, குதிரை கட்டுக் கூடத்திலிருந்து குதிரைகள் எங்கோ போய் விட்டன என்பதைப் பலநாள்களுக்குப் பிறகு பதிவு செய்வதற்கு ஆகும் செலவு போன்றது இது.

**பொருளியல் வளர்ச்சித்திட்டம் என்றால் என்ன?**

இந் நாட்டின் பொருளியல் வளர்ச்சித் திட்டமே நாட்டிலுள்ள வசதியும் வருவாயும் மிகுந்த மேல் மட்டத்திலுள்ள 10% முதல் 15% வரை மக்கள் நாளுக்கு நாள் தம் தேவைகளைப் பெருக்கிக் கொள்வதையும் அதை அடையச் செலவுகளைப் பெருக்கிக் கொள்வதையும் பொறுத்திருக்கிறது.

**வானூர்திச் செலவும், கன்னெய்ச் (பெட்ரோல்) செலவும் பொது மக்களுக்கே தாக்கம்!**

வானூர்தியில் பயணம் செய்பவர்கள் அனைவரும் தங்களது சொந்தச் செலவில் பறப்பவர்கள் என்று சொல்ல முடியாது. அச் செலவுகளை அரசோ, அரசு சார்ந்த தொழில் நிறுவனங்களோ, அல்லது தனியார் துறைத் தொழில், வணிக நிறுவனங்களோ

(தொடர்ச்சி 8-ஆம் பக்கம்)

Scanned with CamScanner

தொடர் (4)

# "தமிழீழ மக்கள் விடுதலைப் புரட்சியும், இந்தி(ய) வல்லரசின் சூழ்ச்சிகளும்"

-- செ. அமிழ்தன். --

### புலிகள் இயக்கமும் தில்லியரசின் சூழ்ச்சியும்:

இந்நிலையில் தமிழீழத்தில் புலிகள் இயக்கம் வலிமை பெற்ற இயக்கமாக உருப்பெற்று விட்டதைக் கண்டு அஞ்சிய தில்லியரசு, அப்புலிகள் இயக்கத்தை இரண்டாக உடைப்பதன் மூலம் அதன் வலிமையைக் குறைத்து விடலாம் என எண்ணி, அதற்கான சூழ்ச்சி வேலைகளில் இறங்கியது. இதனையுணர்ந்த புலிகளின் தலைவர் பிரபாகரன், சென்னையிலிருந்து யாழ்ப்பாணம் சென்று தமது இயக்கத்தினை வலிமைப் படுத்தும் முயற்சிகளில் ஈடுபட்டார். இதனால் தில்லியரசின் இரண்டாகப் பிளக்கும் சூழ்ச்சி தகர்ந்தது. எனவே அத் தில்லியரசு இலங்கை அரசினைத் தூண்டி, சிங்கள இடது சாரிகளுடன் ஈழப் போராளிகள் இணைந்து இலங்கையரசினைக் கவிழ்க்க செய்து வருகின்றனர் எனக் குற்ற அறிக்கையை வெளியிடக் கூறியது இதன்மூலம் இலங்கைப் படைகளை எந்த நேரத்துக்கும் இயங்குவதற்கு அணியமாக வைத்திருக்கக் குறிப்புரை கூறியது.

### இலங்கையரசின் யாழ்ப்பாண முற்றுகையும், தில்லியரசின் கண்ணீர் உதவி நாடகமும்:

இந்நிலையில் புலிகள் இயக்கம் யாழ்ப்பாணம் முழுவதும் தங்களுடைய கட்டுப் பாட்டில் இயங்குவதைக் கொண்டு, அதை விடுவிக்கப்பட்ட பகுதியாக அறிவித்து, பொதுத்துறையை (Civil administration) ஏற்பதாக அறிவித்தது. இதனைக் கரணியமாக் கொண்டு இலங்கையரசு யாழ்ப்பாணத்தின் மீது தனது "பொருளியல் தடை" (Economic Ban) ஏற்படுத்தி, அனைத்துப் பொருட்களையும் யாழ்ப்பாணம் கொண்டு செல்வதை நிறுத்தி, முப்படைகளைக் கொண்டு யாழ்ப்பாணத்தைக் சுற்றி வளைத்து முற்றுகைப் போர் புரியத் தொடங்கியது. இதனால் தமிழக அரசியல் தலைமைகள் தில்லி யரசைத் தனது படைகளை அனுப்பிப் புலிகளுக்கு உதவுமாறு வேண்டுகோள்களைக் குவித்தன. இதன் மூலம் அவை தில்லியரசின் படையெடுப்புக்கு ஒப்புதல் அளிக்கத் தொடங்கின. (இதை எதிர்த்தே அரியலூர் தொடர்வண்டி நேர்ச்சி நடந்தது). இலங்கைப் படைகளின் முற்றுகைப்போர் ஆறு திங்கள் காலத்திற்கு மேலும் நீடித்தது. இதனையே ஒரு கரணியமாக எடுத்துக் கொண்ட தில்லியரசு தனது சூழ்ச்சி வலைகளை மேலும் படர விரித்தது. எனவே அது மக்களுக்கு உதவுவது எனக் கூறிக் கொண்டு முதலில் படகுகளில் உணவுப் பொருள்களை ஏற்றிக் கொண்டு சென்று, அதை இலங்கையரசு மறுப்பது போன்ற ஒரு நாடகம் நிறைவேறியதும், வான்வழி வாயிலாக இவற்றில் சிறு பகுதியை எடுத்துச் சென்று கொட்டி விட்டு இந்தியாவுக்குத் திரும்பியது. இதன் மூலம் தில்லியரசு ஈழமக்களுக்கு மாந்த நேயத்தின் அடிப்படையில் உதவுகிறேன் என்று மார் தட்டிக் கொண்டது.

### ஆளுமை வெறியாளிகள் அரசியற் சரிவும், இந்தி(ய) -- இலங்கை உடன்பாட்டுத் திணிப்பும்:

இக்காலத்தில் இலங்கையரசை எதிர்த்துச் சிங்களப் பகுதிகளில் கால் கொண்டிருந்த J.V P என்னும் "மக்கள் விடுதலை முன்னணி" இயக்கம் தனது ஆதரவை ஈழப் போராளிகளுக்கு வெளிப்படையாக அறிவித்துத் தனது செயற்பாடுகளின் மூலம் ஒரு முடுக்கத்தைக் கொடுத்தது. இவ்வமைப்பைக் கண்டு இலங்கையரசு தனது ஆளுமைக்கு ஏதம் (அபாயம்) வந்து விடுமோ என அஞ்சி ஊசலாடியது. அதே போல் இந்தியாவில் தாம் செய்த ஊழல்களினால் அம்பலப்பட்டு ஓர் அரசியல் சரிவை நோக்கித் தில்லி ஆளுமை வெறிக்கும்பல் வந்து கொண்டிருந்தது. எனவே இலங்கைப் பகுதிகளில் வளர்ந்து வரும் J. V. P இயக்கத்தின் ஈழ விடுதலைக்கு ஆதரவான செயற்பாடுகளையும், இலங்கைப் படைகளின் முற்றுகையை எதிர்த்துப் போரிடும் புலிகள் மற்றும் அதன் தோழமை இயக்கங்களின் வலிமையையும் கண்டு, எங்குத் தமிழீழம் பிரிந்து விடுமோ, என அஞ்சிய இலங்கையரசின் ஆளுமைதனைக் காக்கவும், தனது ஆளுமையின் அரசியல் சரிவைத் தூக்கி நிலை நிறுத்தவும் வேண்டிப் புலிகளுக்குக் கிடைக்கும் ஆதரவைத் தடுக்கும் முயற்சிகளில் ஈடுபட்டது, தில்லியரசு. இதனால் அது தான் உருவாக்கிய இரு போலி சார்பு ஈழவிடுதலை இயக்கங்களாகிய மூன்று விண்மீன் குழுவிற்கும் ஈழ தேசிய சனநாயக விடுதலை முன்னணிக் குழுவிற்கும் கருவிகளை வழங்கி ஒரு பெரும் போரை யாழ்ப்பாணத்தில் புலிகள் நடத்துவது எனத் திட்டமிட்டது.

இதற்கிடையே இந்தி(ய)த் தில்லித் தலைமையமைச்சருக்கும் இலங்கையரசுத் தலைவருக்கும் இடையே ஓர் (ஆட்சியைக் காப்பாற்றிக் கொள்-

ளும்) உடன்பாடு உருவானது. இதன் மூலம் தில்லியரசு திம்பு பேச்சுரையைக் காலத்திலிருந்தே வலியுறுத்தி வந்த தமிழ் மாநில (அரை - அரசமைப்பு)த் தீர்வு போராளிகளுக்கிடையே திணிக்கப்பட்டது. இதனை இந்தி(ய)த் தில்லியரசுக்கு முற்றும் கைக்கூலிகளாகிப் பணிந்து போயிருந்த மூன்று விண்மீன் குழு வியக்கங்களாகிய டெலோ, பிளாட், இ. பி. ஆர். எல். எப். போன்றவையும், ஈழதேசிய குடிநாயக விடுதலை முன்னணியில் இருந்த பிளாட், மற்றும் இ. பி. ஆர். எல். எப். இயக்கங்களின் பிரிவு இயக்கங்களும், வாய் பொத்தி, கைக்கட்டி ஏற்றுக் கொண்டன. ஆனால் தமிழீழத்தில் இலங்கைப் படைகளின் முற்றுகையை எதிர்த்துப் போராடி வந்த புலிகளும், ஈரோசும் ஏற்றுக் கொள்ளத் தயங்கின.

இதற்காக (நட்பு என்னும் அடிப்படையில் எனக் கூறி) யாழ் நகரில் இருந்த பிரபாகரனைத் தில்லியரசு தனி வானூர்தி மூலம் அழைத்து வந்து உடன்பாட்டை ஏற்றுக் கொள்ளக் கூறி கட்டாயப் படுத்தியது. அதனை ஏற்கமறுத்த புலிகளின் தலைவர் பிரபாகரனும், ஈரோசு தலைவர் பாலகுமாரனும் தனித்தனியே இந்திய உளவுப்படையினரால் தனி (சிறை)ப் படுத்தப்பட்டுத் தனிமைப் படுத்தப் பட்டனர். இதன் பிறகே கொழும்பில் இரு ஆளுமை வெறியர்களும் கூடி, ஈழப் போராளிகளின் எந்தவொரு குழுவும் கலந்து கொள்ளாத நிலையில் தாங்கள் உருவாக்கிய (தங்களின் ஆட்சி நிலைப்பு) உடன்பாட்டில் கையொப்பம் இட்டுக் கொண்டனர். ***இதன் மூலம் தமிழீழம் பிரியக் கூடாது என்ற தில்லியரசின் சூழ்ச்சியும், இலங்கையில் தனது வல்லரசு மேலாளுமையை விரிவுபடுத்தி நிறுவ வேண்டும் என்ற நெடுநாள் நோக்கமும் நிறைவேறியது.***

இவ்வுடன்பாட்டை இந்திய — இலங்கை உடன்பாடு என இரு ஆளுமை வெறி அரசுகளும் பரப்பத் தொடங்கின. இவ்வுடன்பாட்டின் உடனடி விளைவாக இந்திய அரசப்படைகள் தமிழீழத்தில் **"இந்திய அமைதி காக்கும் படை"** எனும் பெயரில் இறக்கிவிடப்பட்டன. உடன்பாட்டில் கையொப்பமிட்டுத் திரும்பிய இந்தி(ய)த் தில்லித் தலைமையமைச்சர் இராசீவ் காந்தி மீண்டும் புலிகள் மற்றும் ஈரோசு - இன் தலைவர்களை விடுவித்து உடன்பாட்டை ஏற்றுக் கொள்ளும் படி கட்டயப் படுத்தினார்.

நிலைமைகளையுணர்ந்த பிரபாகரனும், பாலகுமாரனும் இராசீவ் அவர்களிடம் சில விளக்கங்களைக் கேட்டுப் பெற்ற பிறகு உடன்பாட்டை ஏற்றுக் கொள்வதாக உறுதியளித்தனர். எனினும் தாம் யாழ்ப்பாணம் திரும்பித் தமது மக்களின் கருத்தை அறிந்த பின்னரே, கருவிகளை ஒப்படைக்க இயலும் எனவும், கருவி ஒப்படைப்புக்குச் சிறிது காலம் நீட்டிப்புத் தேவை எனவும் புலிகள் தலைவர் பிரபாகரன் வேண்டுகோள் விடுத்தார். அதனைத் தில்லியரசு ஏற்றுக் கால நீட்டிப்பை அறிவித்தது. இதற்குப் பின் பாலகுமாரனும். பிரபாகரனும் தமிழீழம் திரும்பினர்.

## புலிகளின் நிலைப்பாடும், உடன்பாட்டு ஏற்பும்:

தில்லியரசிடம் கூறியது போலவே மக்கள் கருத்தறிவதற்கென ஒரு பொதுக் கூட்டம் யாழ்ப்பாணத்திற்கு அருகிலுள்ள சுதுமலையில் நடந்தது. இதில் இறுதியாக, தாம் உடன்பாட்டை ஏற்றுக் கொள்வதாகக் கூறிய பிரபாகரன், தமது மக்களிடம்,

"நாம் ஏற்றுக் கொண்டாலும், ஏற்று கொள்ளாவிட்டாலும் இந்த ஒப்பந்தத்தை செயல்படுத்தியே தீருவோமென இந்திய அரசு கங்கணம் கட்டி நின்றது. நாம் மறுப்புரைப்பதில் பொருளில்லை; எமது அரசியல் தலைநெறியை எமது வல்லமைக்கு அப்பாற்பட்ட ஒரு மாபெரும் வல்லரசு உறுதிசெய்ய முடிவு செய்திருக்கும் போது நாம் என்ன செய்வது? எனவும், தாம் உடன்பாட்டினை ஏற்கும் தன்மையைத்—"

"திடீரெனக் கால இடையீடின்றி, எமது போராளிகளின் ஒப்புதலின்றி, எமது மக்களின் பாதுகாப்புக்கும் உறுதியுமின்றி இந்த ஒப்பந்தம் எம்மைக் கருவிகளற்றவர்களாக்குகிறது. ஆகவே நாம் கருவிகளை ஒப்படைக்க மறுத்தோம். இந்தச் சூழ்நிலையில் இந்தியத் தலைமையமைச்சர் இராசீவ் எம்மை அழைத்துப் பேசினர். அவரிடம் எமது சிக்கல்களைப் பற்றி மனந்திறந்து பேசினேன். சிங்கள இன வேற்றுமை அரசில் எமக்குத் துளிகூட நம்பிக்கை இல்லை என்பதையும், அவர்கள் இந்த ஒப்பந்தத்தை நிறைவேற்றப் போவதில்லை என்பதையும், இந்தியத் தலைமையமைச்சரிடம் எடுத்துரைத்தேன். எமது மக்களின் பாதுகாப்புச் சிக்கலைப் பற்றியும் அதற்கான உறுதிப்பாடுகள் பற்றியும் அவரிடம் பேசினேன். இந்தியத் தலைமையமைச்சர் எமக்குச் சில உறுதிமொழிகளை அளித்தார். எம் மக்களின் பாதுகாப்புக்கு உறுதி அளித்தார். இந்தியத் தலைமையமைச்சரின் நேர்மையில் எமக்கு நம்பிக்கையிருக்கிறது. அவர் உறுதி மொழிகளில் நம்பிக்கை இருக்கிறது." எனவும் எடுத்துரைத்துக் கருவிகளை ஒப்படைப்பது பற்றிக் கூறுகையில், "நாம் கருவிகளைக் கையளிக்காது போனால் இந்தியப் படையுடன் மோதும் தீயவாய்ப்பு நிலை ஏற்படும்; இதை நாம் விரும்பவில்லை. இந்தியாவை நாம் நேசிக்கிறோம். இந்திய மறவனுக்கெதிராக நாம் கருவிகளை நீட்ட அணியமாக இல்லை. எம் எதிரியிடம் இருந்து எம்மைப் பாதுகாக்கும் பொறுப்பை இந்தியப்

(தொடர்ச்சி 8 ஆம் பக்கம்)

(5-ஆம் பக்கத் தொடர்ச்சி)
தாம் ஏற்றுக் கொள்கின்றனர். எனவே வானூர்தி கட்டணங்கள் கூடுவதால், இந் நாட்டுக் கீழ்நிலை மக்களுக்குத் தாக்கம் கிடையாது என்று கருதிக் கொள்ளக் கூடாது. இந்தச் செலவுகள் யாவும் மக்கள் வரிப்பணத்திலிருந்துதான் செலவிடப் படுகிறது, அவர்கள்தாம் இவற்றையும் சுமந்து கொள்கின்றனர் என்று கருத வேண்டும்.

அதே போல்தான் கன்னெய்த் தொடர்பான செலவுகளும். இந்த நாட்டில் ஓடும் இயங்கிகள் எல்லாம் செல்வர்களே பயன்படுத்துபவை என்று தவறாக எண்ணி விடக் கூடாது. அரசுக்கும் அரசு சார்ந்த நிறுவன அதிகாரிகளுக்குந்தாம் இந் நாட்டில் பதிவு செய்யப்பட்டுள்ள இயங்கிகளும், மகிழுந்துகளும் சொந்தமாகின்றன. கன்னெய் விலை கூடினாலோ குறைந்தாலோ அதனால் எவ்வகைத் தாக்கமும் இவர்களுக்கு ஏற்படப் போவதில்லை. அரசோ, அரசு சார்ந்த நிறுவனமோ தாம் இதைச் சுமக்கப் போகின்றது. தனியார் துறைகளில் ஓடும் இயங்கிகளோ வரி கொடுப்பதைத் தவிர்க்கவே பல இயங்கிகளை வைத்துக் கொண்டிருக்கின்றன. அவற்றிற்காகும் செலவுகளைக் கூட்டிக் காட்ட இந்த விலை உயர்வு உதவுகிறதே தவிர, கன்னெய் விலை கூடுவதால் அதனால் பயன்பாடு அவர்களுக்குக் குறைவதில்லை. சுமப்பவர்கள் தாம் என்றைக்கும் பொதுமக்களாகவே இருக்கிறார்கள்.

**எல்லாம் சடங்குகளே!**

அரசின் பொருள் நிலை ஒதுக்கீடுகள், வரிக் கணக்கு நிலைகள் இவற்றையெல்லாம் 'பொருள் மதிப்பீட்டுக் குழுக்கள்' சரிபார்த்துத் தம் கருத்துகளை அரசுக்குத் தெரிவிக்க வேண்டும். அரசின் பலவாறான பொருள் நிலை மதிப்பீடுகளையும் செலவுகளையும் பல பொருள் மதிப்பீட்டுக் குழுக்கள் (நிதிக் கமிசன்கள்) மறுத்துக் கருத்தறிவித்திருக்கின்றன. ஆனால் அம் மறுப்புகள் ஒரு சடங்காகவே நடைபெறுகின்றன. அவற்றின் மறுப்புகளைப் பொருட்படுத்தாமலிருப்பதும் ஓர் அரசியல் சடங்காக நடைபெறுகின்றன. ஆக, இப்படிச் சடங்குகளால் ஆன தொடர் நாடகம் தான் அரசியல். எனவேதான். அரசியலில் நடிகர்களுக்கு மதிப்பும் பெருமையும் கிடைத்து வருகின்றன.

அடிப்படை. வெ. இராமச்சந்திரன்
1988-89 வரவு செலவுத்திட்டக் கட்டுரை
நன்றி: 'சர்வோதயம்', ஏப்:'88

## அன்பர்கள் கவனிக்க!

பொறுப்பாசிரியர் அவர்களை வந்து காணவும், கண்டு பேசவும் விரும்பும் அன்பர்கள் கட்டாயம் காரி, ஞாயிறு ஆகிய நாள்களில் மாலை 5 மணிக்கு மேல், எழுதி இசைவு பெற்றுக் கேட்டுக்கொண்டு வருமாறு வேண்டிக் கேட்டுக்கொள்கிறோம்.

# இந்தியாவில் வறுமை ...?

இந்த நாட்டு அரசுக்கு வருமானமில்லாததால் வறுமை போகவில்லை என்றோ, இந்நாட்டில் உணவு, உடை, வீடு தட்டுப்பாடு அரசுக்கு வருமான மில்லாததால் ஏற்படுகிறது என்றோ, அரசு செலவு செய்யாததால் சாரவுணவின்றிக் குழந்தைகள் இறந்து போகின்றன என்றோ சொல்ல முடியாது.

உண்மையில் அரசுக்கு ஏராளமான வரவும் ஏராளமான செலவும் இருக்கிறது ஆனால், அவை உண்மையில் வேண்டுவோருக்குப் போய்ச் சேருவதில்லை, அவ்வளவுதான். அதற்குக் காரணங்கள் பல....

மக்களுக்கு இன்றியமையாத அடிப்படைத் தேவைகளுக்காக நாள்தோறும் உரு 6.53 கோடியும், அவர்களை அடக்குவதற்குரிய படைத்துறை மற்றும் காவல் துறைகளுக்கு நாள்தோறும் உரு. 29.14 கோடியும் செலவு செய்வது, மாற்றார் ஆட்சியிலிருந்த நடைமுறையை நீடிப்பதே ஆகும்.

வசதிகள் இருக்கின்றன. பொருள் உள்ளது. பணம் இருக்கிறது. அவையனைத்தையும் வேண்டாத வேலைகளுக்குச் செலவழித்து விட்டு, மக்கள் உணர்ச்சி வயப்பட்டால், அவர்களை அடக்குவதற்கு, காவல்துறை மீதும் படைத்துறையின் மீதும் ஏராளமான பொருளை முடக்கி, அவை மீது நம்பியிருக்கும் ஆட்சிக்கு அடிகோலுவது சரிதானா என்ற கேள்வி எழுகிறது.

இந்தப் போக்கு நாளுக்கு நாள் கூடுதல் கடுமையாகி வருகிறது. ஆட்சியைக் காக்க மேலும் கருவிகள் தாங்கிய படைத்துறை தேவைப் பட்டுக் கொண்டே யிருக்கிறது. தரைப் படைக்கும் கப்பற் படைக்கும் மேலும் மேலும் ஆற்றல் மிக்க போர்க் கருவிகள் தேவை. மக்களுக்குத் தேவைப் படும் இன்றியமையாத பொருள்களின் தட்டுப்பாடு பெருகும். செல்வர்களுக்குச் சலுகைகள் பெருகும். அதிகாரிகளுக்கு வசதிகள் பெருகும். 'மக்கள் பணம் மக்களுக்கில்லை' என்று ஆகி வருகிறது.
— வெ. இராமச்சந்திரன். 'சர்வோதயம்: 45:7.

(7-ஆம் பக்கத் தொடர்ச்சி)
படை வீரர்கள் ஏற்றுக் கொள்ளுகிறார்கள். நாம் கருவிகளை அவர்களிடம் கையளிப்பதிலிருந்து ஈழத்தமிழன் ஒவ்வொருவனது உயிருக்கும் பாதுகாப்புக்கும இந்திய அரசுதான் பொறுப்பாக இருக்க வேண்டும் என்பதை நான் இங்கு இடித்துக் கூற விரும்புகிறேன்.—''

— என்றும் கூறித் தமது இயக்கம் உடன் பாட்டை ஏற்கும் தன்மையை தமிழீழ மக்கள் முன்னிலையிலும், அனைத்துலக நாடுகளின் தாளிகையாளர்கள் முன்னிலையிலும் எடுத்துரைத்துத் தில்லி இந்தி(ய) அரசுடன் ஒத்துழைக்க இசைந்தார்.
— (தொடரும்.)

Scanned with CamScanner

(3-ஆம் பக்கத் தொடர்ச்சி)
யல் கொள்கையால் 4000 அயல் நாட்டுத் தொழில் நுட்பங்கள் இறக்குமதியாகின்றன. நம் நாட்டிலேயே இதற்குச் சமமான தொழில் நுட்பங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அவற்றையே நாம் ஆதரிக்க வேண்டும்,'' என்று கூறியுள்ளார்.

மேற்கூறிய கருத்து, நம் நாட்டின் தேசிய உருவாக்கம் — விளைவிப்பு உறவுகளைக் கணக்கில் கொள்ளாமல், பிற நாட்டு முன்னேற்றங்களை நம் முதுகில் சுமக்கின்ற அவலங்களைக் சுட்டிக் காட்டுகிறது. எனலாம்!

நம் கல்வி, நம் சிந்தனை நம் தேசியத் தளத்தில் தீர்மானிக்கக் கூடியதாக இருத்தல் வேண்டும்.

அடுத்து, அதே நிகழ்ச்சியில் பேசிய குன்றக்குடி அடிகளார், ''உரிமை (சுதந்திரம்) வாங்கி 42 ஆண்டுகாலமாகியும் இன்னும் நாம் அயல் நாட்டுக் கண்டுபிடிப்புகளையே இறக்குமதி செய்து கொண்டிருக்கும் அவலநிலைமை நீடிக்கிறது'' என்கிறார் (தீக்கதிர் 21-4-88)

இச் செய்தியைத் தரும் தீக்கதிர் 'உரிமையை வாங்கிய' நமது நாட்டின் அவலத்திற்கான காரணத்தை நன்றாக அறியும்!

என்றாலும், நம் நாட்டு அரசியல்காரர்கள் 'இந்திய தேசியம்' ஒன்று இல்லை என்பதை அதன் தற்சார்பற்ற தன்மையைக் கூறுவதன் மூலம் ஒப்புக் கொள்கிறார்கள்!

பல்வேறு தேசியங்கள், நிலக் கிழமை உறவை அறவே தூக்கியெறிந்து ஒரு புதிய மக்கள் நாயகத்தை உருவாக்கத் தக்க ஒரு புதிய கல்விக்கான போராட்டத்தை நடத்துதல் வேண்டும். இதற்கான கல்வி இயக்கம் உருவாதலும் வேண்டும்.

## 5. மாணவர்களின் அறிவுமுயற்சிக்கு ஆசிரியர்கள் தடையா?

தமிழ்நாடு தொடக்கப் பள்ளி ஆசிரியர் கூட்டு இயக்கம் சார்பில் அதன் பசும்பொன் மாவட்டக்கிளை 21-3-88-இல் வெளியிட்ட துண்டறிக்கையில் உள்ள செய்திகளைப் பற்றிப் பார்ப்போம். இந்த இயக்கம், அனைத்திந்தியத் தொடக்க நிலை ஆசிரியர்கள் அமைப்புடன் (All India Federation of Elementary Teachers Organisation) தன்னை இணைத்துக் கொண்டுள்ளது. அதேவேளை, உலக ஆசிரியர் ஒன்றியம் பெர்லின் — (F.I E.S. World Federation of Teachers Union — Berlin —) அமைப்புடனும் தன்னை இணைத்துக் கொண்டுள்ளது.

இந்த அமைப்பு, தமிழ் நாட்டிலுள்ள தொடக்கப்பள்ளி ஆசிரியர் அமைப்புகளை எல்லாம் ஆய்வுக்குட்படுத்தி வருகிறது. அதேவேளை, இதுவும் ஒரு தொடக்கப் பள்ளி ஆசிரியர் இயக்கமாகவே செயல்பட்டு வருகிறது.

'போராட்டமே பயன்களை வெற்றி கொள்ளச் செய்யும்' என்பது த. தொ. ப. ஆ. கூட்டு இயக்கத்தின் அறைகூவலாக உள்ளது.

உண்மை, நேர்மை, உழைப்பு இயக்கமாக உருவம் பெறுவதற்குக் 'கல்வி' பற்றிய கண்ணோட்டமும் தேவை. இதனை இந்த இயக்கம் பெற்றுள்ளதா என்றும் எதிர்காலத்தில் காணவே போகிறோம்.

கோவை மாவட்டத்தில் உள்ள பல்லடம் தமிழக மாணவர் பேரவையினர், தேர்வுத்தாள்களில் தமிழ் எண்ணைக் குறித்து எழுதிய மாணவர்களை ஆசிரியர்கள் கண்டிப்பதும், புறக்கணிப்பதும் வெறுப்பாக நோக்குவதும் பற்றித் தமிழ்ச்சிட்டு இதழில் மடல் எழுதியுள்ளார்கள். (தமிழ்ச்சிட்டு மார் — ஏப் 1988)

மாணவர்களின் அறிவுமுயற்சிக்குத் தடை போடும் ஆசிரியர்களை மாணவர்கள் எப்படி மதிப்பார்கள்?

ஆசிரியர், மாணவர் உறவு அறிவுமுயற்சிகளில் வலிமை பெறுதல் வேண்டும். அப்போதே கல்வி வளம் பெறும்; நலம் எய்தும்!

''உங்களால் முடியவில்லையானால் முடிந்தவர்க்கு உதவியாயிருங்கள்!'' என்று தமிழ்ச்சிட்டுகளுக்குப் பாவலரேறு கூறியுள்ளதை ஆசிரியர்களுக்கும் பொருந்தி வரக்கூடிய தென்றே கருதுகிறேன். எனவே, இளைய தலைமுறையான மாணவர்களின் அறிவு முயற்சிக்கு ஆசிரியர்கள் தடையாக இருக்கிறார்கள் எனில், இதனைக் கல்வியுலகம் ஏற்காது!

## 6. திருக்குறள் சிந்தனைகள்!

ஆசிரியர் போராட்டம் சமஊதியம் கேட்டு மைய அரசைக் கட்டாயப் படுத்துகிறது. அதே வேளை நம் போராட்டம் மக்களால் ஒப்புக்கொள்ளப் பெறல் வேண்டும். இன்று, சமன்மையில்லாத வாழ்க்கை பற்றி ஆசிரியர்கள் முதலில் உணர்தல் வேண்டும்.

போராட்டம் அப்போதே முன்னேறியதாகவும், புதிய தலைமுறையை ஈர்த்துக் கொள்ளக் கூடியதாகவும் இருக்கும்!

மே முதல்நாள் போராட்டம் பல நூறு ஆசிரியர்களை நீதிமன்ற வாயிலில் நிறுத்தியுள்ளது. மே இரண்டாம் நாள் போராட்டம் இதனை விஞ்சியதாக இருத்தல் வேண்டும் என்கின்றனர்.

நாம் முன்னர் பெருவாரியாகச் சிறையை நிரப்பினோம். அதற்கு ஆதரவாகத் தொழிலாளர்

(தொடர்ச்சி 10-ஆம் பக்கம்)

Scanned with CamScanner

(9-ஆம் பக்கத் தொடர்ச்சி)

இயக்கங்கள் நின்றன. அரசு ஒரு மோதலைத் தவிர்க்கப் 'பேச்சுவார்' நாடகம் நடத்திப் போராட்டத் திசையைத் திருப்பிவிட்டது.

இன்று நாம், அப்போராட்டம் முடிவுற்ற இடத்திலிருந்து தொடங்காமல், திருப்பிவிடப்பட்ட இடத்திலிருந்து தொடங்குகின்றோம். இப் போராட்டம், 'தொடக்கநிலை'யை அடையுமா வேறு திசை போய் முன்னேறுமா என்று பொறுத்திருந்து காணுதல் வேண்டும். ஆனால், இன்று நடக்கும் போராட்ட ஏற்பாடுகளை நோக்கும் போது, முன்னேற்றம் என்று சொல்வதற்கில்லை. ஆனாலும், இதனை வளர்த்தெடுத்தல் வேண்டும்!

முன்பு சிறையை நிரப்பும் போராட்டத்தில் இறுதி நேரத்தில் கலந்து கொண்டவர்கள், இன்று தனியே போராடுகிறார்கள். குட்டையைக் குழப்பும் கூட்டம் தனிமைப்பட்டிருக்கிறது. ஆனாலும், 'ஆயிரம் பணம் கட்டினால் இணையலாம்' என்ற நடைமுறை 'மே இரண்டு' போராட்டக் காரர்களை மேலேற விடாமல் தடுத்தல் கூடும்!

ஆசிரியர்கள் போராட்ட ஏற்பாடுகளில் ஈடுபடாமல், போராட்டக் களத்தில் கலந்து கொள்கிறார்கள். இவர்களை ஆளாக்கும் அமைப்பாளர்கள் எந்தவகையான நோக்கிற்காக இந்தப் போராட்ட அணியைக் கூட்டுகின்றார்கள்? இந்த வினா நம்மை இவர்களிடமிருந்து விலகி நிற்கச் செய்யலாம்!

போராட்ட வளர்ச்சி, சிந்தனை மலர்ச்சியால் உருவாகும். வள்ளுவம், தமிழக மக்களின் அறநூல் வழிகாட்டி. இதனை வளர்த்தெடுத்து இன்றைய குமுகச் சூழலில் சிந்தனையுரம் ஊட்டுதல் கல்வியாளர் கடன் ஆகும்!

அண்ணாமலைப் பல்கலைக்கழகம், 'திருக்குறள் இருக்கை' ஏற்படுத்தியுள்ளது. அது புது உரை விளக்கம் காண்பதற்காக என்றமையாமல், அதனைக் குமுகாய மாற்றத்திற்கான நெறிகாட்டும் நூலாக வளர்த்தெடுத்தல் வேண்டும்.

இவ்வாறே, மார்க்சியம், இலெனியமாக, மாஓ சிந்தனையாக வளர்த்தெடுக்கப்பெற்ற தென்பதை நினைவில் கொண்டு, ஆசிரியர் இயக்கங்களும், கல்வியியக்கங்களும் வளர்ச்சி நோக்கி உயர்தல் வேண்டும்.

## 7. வேலையில்லாத் திண்டாட்டம் ஏன்?

கல்வியாளர்களே,

தமிழக இளைஞர் மன்றம், "தமிழ் நாட்டில் ஏன் வேலை இல்லாத் திண்டாட்டம் நிலவுகிறது!" என்ற சிற்றேட்டில், 'இன்றைய கல்விமுறையும் வேலைவாய்ப்பும்' என்ற தலைப்பில் உள்ள குறிப்புகளைக் காண்போம்.

1. இன்றைய கல்விமுறை தற்சார்புக்கான வழிகளைச் சொல்லித் தருவதில்லை.

2. புதிய கல்விக் கொள்கை மேட்டுக் குடிகளுக்கு மட்டும் பயன்படும்.

3. வாழ்க்கையுடன் ஒட்டுறவு இல்லாத கல்வி முறை

4. நம் இளைஞர்கள் (தமிழ்) தேசப்பற்று இல்லாதவர்களாக அயல் காமத்தில் ஊறியவர்களாக அடிமை மனம் கொண்டவர்களாக — பொறுப்பற்றவர்களாக வளர்கிறார்கள்.

நம் இளைஞர்கள் இன்றைய அமைப்பினை மாற்ற வல்லவர்களாக விளங்கக் கல்வி முறையில் புரட்சி வேண்டும் என்பதை மீண்டும் நினைவில் கொள்வோம். 0

# வழக்குமன்ற நடவடிக்கைகளுக்குப் பொருளுதவி செய்யுங்கள்!

அண்மையில், எதிர்பாராத வகையில், நம் உ. த. மு. க. இயக்க அன்பர்களில் ஒருவர், கழக முதல்வரின் கருத்துக்கு மாறாகவும் நம் இயக்க நடைமுறைகளுக்கு வேறாகவும், செய்த சில தேவையற்ற செயற்பாடுகளால், நம் இயக்கத்திற்கு அரசின்ராலும் காவல் துறையாலும், பெரிய தாக்கம் நேர்ந்துள்ளது. அதற்கென அகத்தும் புறத்தும், எச்சரிக்கையாக, இயக்க நன்மையையும் எதிர்கால நிலைபாட்டையும் செயற்பாட்டையும் கருதி, சில வழக்கு மன்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டும், எடுக்க வேண்டியும் உள்ளன. அவற்றுக்கெனப் பல்வேறு வகையில் பொருட் செலவு நேர்ந்துள்ளது; நேரவும் இருக்கிறது.

அதனை மனத்தில் கொண்டு, **தென்மொழி, தமிழ்நிலம்** அன்பர்களும், உ. த. மு. க. ஆர்வலர்களும் தங்களால் இயன்ற பொருளுதவியைத் **தென்மொழி ஆசிரியர்** அவர்களின் பெயருக்கு நன்கொடையாக அனுப்பி உதவ வேண்டுகின்றேன்.

அன்பர்கள் இத் தொல்லையைப் பொறுத்துக் கொள்ளவும் கேட்டுக் கொள்கிறேன்.

தென்மொழி
சென்னை
30-6-88.

அன்பன்
பெருஞ்சித்திரனார்.
ஆசிரியர்.

Scanned with CamScanner

# இராசீவ் கட்சியில் அரசியல் அலங்கோலங்கள்!

அலகாபாது தொகுதித் தேர்தலில் இராசீவ் கட்சி (இனி இந்திராக் கட்சி என்பதை இராசீவ் கட்சி என்பதில் என்ன பிழை? அவருக்காகத்தானே அக் கட்சி இருக்கிறது.) மக்களின் மத உணர்வுகளைத் தூண்டி, அரசியல் ஊதியம் தேடும் வகையில், அது தொலைக் காட்சி இராமாயணத் தொடர் நாடக 'இராமர்' அருண்கோவிலை தேர்தல் மேடைகளில் ஏற்றி மக்களிடம் ஒப்போலைகளைக் கேட்கச் செய்தது.

அவரை மேடையில் வைத்துக் கொண்டே தேர்தல் பேச்சாளர்கள் அனைவரும், அரசியல் பேசுவதை விட்டு விட்டு இராம வழிபாடு நடத்தும் மதப் பேச்சாளர்களாக மாறிவிட்டனர். தங்கள் பத்திவழி அறிவுரையின் இறுதியில் அவர்கள் 'இராமச்சந்திர மூர்த்தி வாழ்க' என்று வாழ்த்து எழுப்பவும் தவறவில்லை.

ஆனால் 'இராமரை' (அருண் கோவிலை)க் கண்டு வணங்க வந்திருந்த பெருங்கூட்டத்தினர் இதை விரும்பவில்லை. மாறாகப் பொறுமை இழந்தவர்களாகக் காணப்பட்டனர். இதனால் பேச்சாளர்கள் பேசும் போதும், அவர்கள் பேச்சை முடித்துக் கொள்ளும் பொருட்டு, மக்கள் கிண்டலும் நையாண்டியும் செய்யத் தவறவில்லை. பேச்சாளர் சிலரைக் கூட்டத்தினர் கூச்சலிட்டே மேடையில் அமரச் செய்தனர். பேராயக் கட்சிப் பொதுச் செயலாளர், அமைச்சர்கள் — யார் பேச்சுக்கிடையிலும் கூட்டம் கூச்சலிட்டுக் கொண்டே இருந்தது.

மக்கள் தேர்தல் பேச்சுகளைக் கேட்பதாக இல்லை, அருண்கோவிலை (நாடக இராமரை)ப் பார்க்கும் ஆவலில் முண்டியடித்துக் கொண்டு மேடைப் பக்கம் வந்தனர். அங்குப் போடப் பட்டிருந்த தடைகளையும் உடைத்தெறிந்தனர். மேடையின் ஒரு பகுதியையும் அவர்கள் சேதப்படுத்தினர். மேடை சரியத் தொடங்கவே, அமைச்சர்களும் மற்றவர்களும் மேடையிலிருந்து கூட்டமாக நழுவ முயன்று ஒருவர் மீது ஒருவர் தடுக்கி விழுந்தனர். இவ் வேளையைப் பயன்படுத்திக் கொண்டு, நாடக 'இராமர்' அருண் கோவில் தம் கவர்ச்சியை (செல்வாக்கை) உயர்த்திக் கொள்ள மேடையில் 'தோன்றி'த் தமது வலக் கையை உயர்த்தி மக்களை வாழ்த்துவது (ஆசீர்வதிப்பது) போலப் (பாவனை) நடிப்புச் செய்தார். கைகளை உயர்த்திய படியே அவர் 'இந்திராக் கட்சிக்கு ஒப்போலை (ஓட்டுப்) போடுங்கள் — என் வாழ்த்துகள் (ஆசீர்வாதம்) உங்களுக்குக் கிடைக்கும்' என்றார்.

ஆனாலும் கூட்டத்தினர் பொறுமை இழந்து கூச்சலிட்டனர். அப்பொழுது இந்திராக் கட்சிப் பொதுச் செயலாளர் குலாம் அபி ஆசாத், "நீங்கள் எல்லாம் இராமரை நேரில் பார்க்க வேண்டாமா? என்று கேட்டார். கூட்டத்தினர் அதற்கும் கூச்சலிட்டுக் குழப்பம் செய்தனர்.

அப்பொழுது பேச்சாளர் ஒருவர் 'அருண் கோவிலை இராமர் உடையில் காண விரும்புவர்கள் கைகளை உயர்த்துங்கள்' என்றார். கூட்டத்தினர் எல்லாரும் கைகளை உயர்த்தினர். பேச்சாளர்க்கு அது நிறைவை அளித்தது.

அடுத்து, அவர் 'அருண் கோவிலை இராமர் உடையில் காண விரும்பாதவர்கள் கைகளை உயர்த்தலாம்' என்றார். அப்போதும் கூட்டத்தில் எல்லாரும் கைகளை உயர்த்தினர். இதனால் திடுக்கிட்டுப் போன பேச்சாளர் மேடையிலிருந்து மெல்ல நழுவி விட்டார்.

'அலகாபாத்தில் நடப்பது அறப்போர் (தர்ம யுத்தம்) என கல்பனாத் ராய்' வருணித்தார். 'இராம' பிரானை மதித்து வணங்குபவர்கள் இந்தப் போரில் இராமர் பக்கந்தான் இருப்பார்கள்' என்று மீண்டும் அவர் கூறிய போது, பெருத்த கூச்சல் எழுந்தது. கூட்டத்தினர் ஒருமுகமாக 'வி. பி. சிங். வாழ்க' என்று முழக்கமிட்டனர்.

அவர்களை அமைதிப்படுத்த அசோக்பாய் என்ற முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் 'இராமச் சந்திர மூர்த்தி வாழ்க; அனுமன் வாழ்க' என்று முழக்க மிட்டார். அதற்கு அதிக ஆதரவு இருக்கவில்லை.

இறுதியாக நாடக இராமர் 'அனைவரும் இராசீவையே ஆதரிக்க வேண்டும். நான் உங்களுக்கு வாழ்த்து (ஆசீர்வாதம்) தருகிறேன், என்று கூறி முடித்தார்.

— *தினமணி. 14-6-88.*

## தேசியம் புரட்டல்!

*— பறம்பை அறிவன் —*

இந்தியத் தேசியம் — இனி
எத்தனை நாளைக்கு எங்களை ஏமாற்றும்!
நடுவினில் அதிகாரம்
மண்டிக் கிடப்பதால் — நம்
இனிய வாழ்க்கை
சுண்டிக் கிடக்கிறது!
அதிகாரப் பிரிவினை ஆவதே தீர்வெனத்,
"தேசிய முதலாளி" திட்டம் போடுகிறான்..!
அவரின் ஒட்டுக் களவாணி யாகிய
போலி மார்க்சியர் அதிகாரத்தில் பங்கு
கேட்டு நச்சரிக்கிறார்!
புதியபோ ரென்பதாய்ப் புலம்பவும் செய்கிறார்.
தி. மு. க. போன்ற மாநிலக் கட்சிகள்
மயங்கியும் அஞ்சியும் கைவிட்ட தன்றோ
மாநில அதிகாரப் பரவுதல் கொள்கையே!
விடுதலை, மக்களை விரைந்து வந்தெய்த
கொடுதலை என்றதும் கொடுப்பதே கொள்கையாம்!

Scanned with CamScanner

# திரைப்பட நடிகையரின் வேட்டைக்காடா தமிழ் நாடு?

- பாவலர். தமிழ்க்குமரன், ஈரோடு -

திரைப்பட நடிகையரின்
வேட்டைக் காடா
தென்னாடு — தமிழா !
உன் நாடு ?

சிந்திக்கா(து) அவரிடம்
அடகுவைக் காதே
திருநாட்டை — உணர்வாய்
வருங்கேட்டை !

தரைபட்டுப் போகும்
உனது வாழ்வு
தமிழா ! கேள் — சேற்றில்
அமிழாதே !

தளுக்கிக் குலுக்கி
வந்துனை மயக்கி
வலைவிரிப்பார் — மாயக்
கலை விரிப்பார் !

உரைத்திடக் கூசும்
உனது செயலுக்கு
நாணிடுவாய் — உரிமை
பேணிடுவாய் !

ஊக்குவித்(து) அவர்களை
உயர்த்தி வைத்து நீ
தாழாதே — குழியில்
வீழாதே !

விரைவில் அவர்களை
விரட்டியிந் நாட்டை
விடுவிப்பாய் — நல்ல
முடிவெடுத்து .

மேவி அவர்பேச்சை
மிகநம்பி ஏமாறிப்,
போகாதே — பின்னர்
நோகாதே .

---

## மா ஓ - மொழியிலிருந்து.

— பறம்பை அறிவன்.

மரம் அசையாமல் சும்மா இருந்தாலும்,
காற்று சும்மா விடுமா ?
நீ சிக்கல், நெருக்கடி என விலகி ஓடினாலும்,
நின்றாலும் இருந்தாலும்,
புறவுலகத் தாக்கம் உன்னைவிடாது.
தோழா, நீ விதை !
மக்களிடையே ஊன்றி வளர்ந்து மலர்ந்து வாழ்க !
ஆயிரம் தடைகள் மலையெனத் தடுத்தாலும்
உளியாய் மாறி உடைத்துப்
பாதை போடு — பண்பாடு தேடு !


(மாதம் இருமுறை வெளிவரும்) இதழ் எண். 106:


உ.த.மு.க.வின் உயர்ந்த கொள்கைகள்!
1) தூய்மையான தமிழ்மொழி முன்னேற்றம்!
2) சாதியற்ற, மத வேறுபாடற்ற சமநிலைக் குமுகாயம்!
3) இழிவுகளும், பூசல்களும், ஏமாற்றும் இல்லாத அரசியல்!
4) தமிழ்த்தேசிய இனத்திற்குப் பொருந்திய பொதுவுடைமைப் பொருளியல்!
5) மனம், அறிவு, வாழ்க்கை இவற்றை வளப்படுத்தலும், வலப்படுத்தலுமான அருவருப்பற்ற கலை வளர்ச்சி!
6) பழந்தமிழ் மரபுக்கும், மாந்தவியல் சிறப்புக்கும் ஒத்த பண்பாட்டுப் பரிமாற்றம்!
7) எல்லாவற்றிலும் காலத்திற்கேற்ற அறிவியல் அணுகுமுறை!

சிந்தனைக்கு - 24
ஒருசிலர் துணை வருகிறார் என்பதால், ஒரு செயலை அதற்குரிய சூழ்நிலை வருமுன் கைவிடுத்தல் தோல்வியையே தரும்.

அனுப்புதல்:
**தமிழ்நிலம்**
5. அருணாசலத் தெரு
திருவல்லிக்கேணி, சென்னை-5

தொலைபேசி எண்: 847829;

உறுப்பினர்:

| | |
|---|---|
| தனி இதழ் விலை | உரு: 1-00 |
| ஆண்டுக் கட்டணம் | உரு. 50-00 |
| அரையாண்டுக் கட்டணம் | உரு. 25-00 |

பெறுநர்: நூல் அஞ்சல்
திரு. / திருவாட்டி


ஆசிரியரும், வெளியிடுபவரும்: பாவலரேறு பெருஞ்சித்திரனார்,
அச்சிடுவோர்: தென்மொழி அச்சகம், 5, அருணாசலத் தெரு, சென்னை-5
TN/MS (C) 657